## சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - திருமதி.மு.சாஹித்தியா - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

அரசாணை (3டி) எண்.26

நாள் : 28.11.2022
சுபகிருது, கார்த்திகை - 12
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (கியூ) துறை, நாள். 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.8657/கே2/2021, நாள் 06.12.2021.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.8657/கே2/2020, நாள் 04.05.2022.

---

**ஆணை:**

பதிவுத்துறையில், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது பணிக்காலத்தில் 19.09.2020 அன்று காலமான திரு.கொ.முத்துராஜா என்பவரது (வாரிசுதாரர்) மகள் திருமதி.மு.சாஹித்தியா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 18.02.2021 அன்று மறைந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.M.மஞ்சுளா மற்றும் திருமதி.மு.சாஹித்தியா ஆகியோரது மனுக்கள் பெறப்பட்டன. அன்னாரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர்

நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி திருமதி.மு.சாஹித்தியா கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய வயது மற்றும் கல்வித் தகுதிகளைப் பெற்றிருக்காதபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திருமதி.மு.சாஹித்தியா 09.12.2021 முற்பகல் முதல் தென்சென்னை பதிவு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திருமதி.மு.சாஹித்தியா, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத்தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில் திருமதி.மு.சாஹித்தியா, 09.12.2021 முற்பகல் முதல் தென்சென்னை பதிவு மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். மறைந்த அரசு ஊழியரின் திருமணமான மகளான திருமதி.மு.சாஹித்தியா என்பவருக்கு கருணை அடிப்படையில் பதிவுத்துறை தலைவரால் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15-ல் மறைந்த அரசு ஊழியரின் திருமணமான மகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வழிவகை செய்யவில்லை. எனவே, அப்பிரிவினை தனியர் பொருட்டு தளர்வு செய்யவும் தனியருக்கு பணிநியமன நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக மேற்காணும் சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியவற்றிற்கு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 58-ன்கீழ், தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விலக்களித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி.மு.சாஹித்தியா, என்பவருக்கு 09.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறை

செய்யப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண். 10053/ட்டி1/2022, நாள் 30.05.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 3238098/ஜி1/2022-1, நாள் 07.10.2022 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்.

பெறுநர்

பதிவுத்துறை தலைவர், சென்னை-28.

திருமதி.மு.சாஹித்தியா, இளநிலை உதவியாளர்,

தென் சென்னை பதிவுமாவட்டம். (பதிவுத்துறை தலைவர் வழியாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத்துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

28/11/22

[illegible]

ந.க.எண்.8657/கே2/2021-1, நாள். 29.12.2022

அரசாணை (3ப) எண்.26 வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.28.11.2022 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி.மு.சாஹித்தியா இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள தென்சென்னை மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியாது பணிப்பதிவேடு அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப தென்சென்னை மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

/ஆணையின்படி/

மாவட்டப்பதிவாளர்.

பெறுநர்
திருமதி.மு.சாஹித்தியா இளநிலை உதவியாளர்
(தென்சென்னை மாவட்டப்பதிவாளர் மூலம்)

நகல்
1. மாவட்டப்பதிவாளர், தென்சென்னை (அசல் சான்றுகளுடன்)
   i) S.S.L.C மதிப்பெண் சான்று.
   பதிவு எண்.890459/மார்ச் 2008
   ii) பிறப்புச் சான்று
2. கோ1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்.
3. முக்கிய ஆணை கோப்பு / தனி நகல் – 1.